மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 107/2013

பெயர் : கிட்டுசாமி
சாட்சி – பி.வா.சா–2 நாள்: 18.09.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதிகள் தரப்பு)**

1. எங்களுக்கு வேங்கடையான் தோட்டத்தில் இருந்த சொத்தினை 1998ம் ஆண்டில் பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் எனது அண்ணன் நடராஜிற்கு சி அயிட்ட சொத்தும், எனக்கு டி அயிட்ட சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு நானும் எனது சகோதரர்களும் அவரவர் பாகத்தை தனித்தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் புல எண். க.ச.38/1 ஆகும்.

2. மேற்படி பாகப்பிரிவினையில் சாமளாபுரம் கிராம க.ச.89 காலை சொத்துக்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த பாகப்பிரிவினையில் எனது சகோருடன் எனது பங்காளிகளும் தரப்பினராக இருந்ததால் குறிப்பிடப்படவில்லை. இந்த வழக்கை எனக்கு எதிராக யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் காளியம்மாள் வகையறா போட்டுள்ளார்கள். காளியம்மாள் யார் என்றே எனக்கு தெரியாது. வாதிகள் யார் என்றே எனக்கு தெரியாதா என்றால் தெரியும் அவர்களுடன் எங்களுக்கு போக்குவரத்து கிடையாது.

3. வாதிகளுக்கு எங்களுக்கும் எவ்வளவு காலமாக போக்குவரத்து கிடையாது என்றால் எவ்வளவு காலம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. காளியம்மாள், மசாத்தாள் ஆகியோரின் தந்தை பெரிய மாரப்ப கவுண்டர் இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் அவர் எங்கள் ஊரில் தான் இறந்தார் அதனால் சென்றேன். 1, 2 வாதிகள் எனது மாமா பெரியமாரப்ப கவுண்டரின் மகள்கள் என்பதும், 3 முதல் 6 வாதிகள் 1, 2 வாதிகளின் வாரிசுகள் என்பதும் எனக்கு நன்கு தெரியும் என்றும், அதைத் தெரிந்தும் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் தாவா சொத்துக்களை 1, 2 வாதிகளுக்கு தெரிந்தே நீண்ட காலமாக அனுபவித்து வருவதாக சொல்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 10.01.1977 தேதியிட்ட பத்திரத்தின் படி தான் சொத்தில் உரிமை கோருகிறேனா என்றால் ஆம். நான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் கையெழுத்து போட்டுள்ள நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சாட்சிகளின் தந்தை பெயர், முகவர் உள்ளிட்ட விவரங்கள் மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

5. 26.12.1955 தேதியிட்ட அசல் பாகசாசனத்தை ஒப்படைத்ததாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகசாசன ஆவணத்தின் அசல் எங்களிடம் தான் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மூலம் உரிமை கோரும் பட்சத்தில் அதற்கு முரணாக எதிரிடை பாத்திய அனுபவம் கோர முடியாது என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தில் எதிரிடை பாத்திய அனுபவம் உள்ளது என்று தெரிவித்துள்ளதற்கு எதிரிடை பாத்தியத்திற்கான நீதிமன்ற கட்டணம் நான் எதுவும் செலுத்தவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் இந்த வழக்கிற்கு பின்னிட்டு பழைய முத்திரைத்தாள்களை வைத்து எங்களால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

7. பதிவு சட்டத்தின் கீழ் முத்திரை கட்டணம் செலுத்தாமல் இருப்பதற்காக மதிப்பை குறைத்து உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. எனது அம்மா மீது உள்ள பாசத்தில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. நான் சொல்வது போல் எனது அம்மா மீது உள்ள பாசத்தில் ஆவணம் எழுதிக் கொடுத்திருந்தால் எனது அம்மாவில் சகோரர் பி.வா.சா.ஆ.1 ஆவணமாக எழுதி கொடுத்திருக்க மாட்டார் என்றும், கொடை ஆவணமாகத்தான் எழுதி கொடுத்திருப்பார் என்றும் சொன்னால் சரியல்ல.

8. எனது அம்மா மீது உள்ள பாசத்தில் ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டதாக எனது முதல் விசாரணையிலோ, எதிர் வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. பெரிய மாரப்ப கவுட்ணர் ஒண்டிப்புதூரில் அவரது மகள் வீட்டில் தான் அவரது

இறுதி காலத்தில் வசித்து அங்கு தான் இறந்தார் என்றால் சரியல்ல. வேலாயுதம்பாளையத்தில் தான் அவர் இறந்தார். பெரிய மாரப்ப கவுண்டர் வேலாயுதம் பாளையம் கிராமத்தில் தான் இறந்தார் என்று காண்பிப்பதற்கு அவரது இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. வாதிகள் பெரியமாரப்ப கவுண்டர் ஒண்டிப்புதூர், நாகையன் தோட்டத்தில் இறந்தார் என்பதை காண்பிப்பதற்கு அவரது இறப்பு சான்றிதழ் மற்றும் அவரது வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் இந்த வழக்கிறக்காக வாதிகள் அவ்வாறு உருவாக்கியுள்ளார்கள். நான் சொல்வது தவறு என்றும், நான் தான் பெரிய மாரப்ப கவுண்டரின் சொத்தினை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. சாமளாபுரம் கிராமம் பட்டா எண். 1146 ஐ 2007 ஆண்டிற்கு பின்னிட்டு வாதிகளுக்கு தெரியாமல் எங்கள் பெயரை சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பெரிய மாரப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும், வாதிகள் அவரது வாரிசுகள் என்றும், நான் அவரது சகோதரரான இணை பாகஸ்தர் சின்னமாரப்ப கவுண்டரிடம் எனது அப்பா சொத்தினை வாங்கி அவரது பெயர் பட்டாவில் இருந்ததால் அதனை சாதகமாக பயன்படுத்தி அவரது வாரிசுகள் என்ற முறையில் எங்கள் பெயரை சேர்த்துவிட்டோம் என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணங்களை உருவாக்கி பொய் சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் எற்கத்தக்கதல்ல என்றும், வாதிகள் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2025.09.18 18:10:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.